நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 104 /2020

## P.W.13 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அன்பழகன் |
| தந்தை / கணவர் பெயர் | : | லட்சுமணன் |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW13 |
| வயது | : | 59 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 05–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.03 PM.

1. நான் தற்போது ஓமலூர் நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 07.11.2019ம் தேதி காலை 7.00 மணிக்கு நான் மேட்டூர் காவல் நிலைய அலுவலில் இருக்கும்போது முன்னால்

மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தங்கராஜ் என்பவரின் இண்டிமேசன் பேரில் மேட்டூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது அங்கு தங்கராஜ் என்பவர் வாய் பேச முடியாமல் சிகிச்சையில் இருந்தார்.

2. பின்பு 05.11.2019ம் தேதி சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த தங்கராஜ் என்பவரிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து மேட்டூர் காவல் நிலைய குற்ற எண். 194/2019 சட்டப்பிரிவு 294(b), 323, 324, 506(ii) IPC ஆக வழக்கு பதிவு செய்தேன். FIR ன் அசல் நகலையும், வாதியின் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து கணம் மேட்டூர் குற்றவியல் நடுவர் நீதிமன்ற எண்.1க்கு அனுப்பியும், மற்ற நகலை சம்பந்தபட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும், முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை காவல் ஆய்வாளர் அவர்களின் புலன் விசாரணைக்கு வைத்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. **மேற்படி அரசு மருத்துவமனையில் இருந்த வரப்பெற்ற எழுத்துபூர்வமான தகவல் இறுதி அறிக்கையுடன் இணைத்து தாக்கல் செய்யப்படாமல் தற்போது காவல் நிலைய வழக்கு கோப்பிலிருந்து எடுத்து தாக்கல் செய்யப்பட்டு கற்றறிந்த எதிரி தர்ப்பு வழக்கறிஞர் சம்மதத்தின் பேரில் அ.சா.ஆ 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் 3 நாட்கள் காலதாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் புகார் ஏன் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்பதற்கான குறிப்பிட்ட காரணம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். **நீதிமன்ற கேள்வி**: ஏன் 3 நாட்கள் கழித்து காலதாமதாக புகார் வாக்குமூலம் பதிவு செய்தீர்கள்? **பதில்:** 3 நாட்கள் காயம் பட்ட நபர் வாய் பேச முடியாமல் இருந்ததால் நான் சென்று பார்த்துவிட்டு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

2. அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற அ.சா.ஆ22 தகவலில் 03.11.2019என தேதி  இரவு 7.00 மணி என குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் மேற்படி ஆவணத்தில் அடையாளம் தெரிந்த 4 ஆண்கள் மற்றும் ஒரு பெண் கத்தியால் வெட்டியதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். மேட்டுர் அரசு மருத்துவமனை விபத்து பதிவேட்டில் 03.11.2019 இரவு 7.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டு தங்கராஜ் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கபட்டுள்ளது என்று குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.

3. சேலம் அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு 03.11.2019 இரவு 10.05க்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் 03.11.2019ம் தேதி மாலை மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் எனக்கு நேரம் சரியாக ஞாபகமில்லை. சேலம் அரசு மருத்துவமனையில் கடந்த 05.11.2019 அன்றே அ.சா.1யிடம் வாக்குமூலம் பெற்றுவிட்டேன் என்றால் சரிதான்.

4. கடந்த 06.11.2019ம் தேதி ஆஜர் எதிரி மோகன்ராஜ் என்பவரிடம் இந்த வழக்கில் பாதிக்கபட்ட நபர்களாக குறிப்பிடப்படும் நபர்கள் அவரை தாக்கியுள்ளதாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலத்தின் அடிப்படையில் கடந்த 07.11.2019 அன்று மேட்டுர் காவல் நிலைய குற்ற எண். 195/2019 என்ற வழக்கினை தங்கராஜ், மணிவண்ணன், எலிசபெத்ராணி ஆகிய மூவர் மீது இதச பிரிவுகள் 323, 324, 294(பி), ஆகியவற்றின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். **அந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ 1ஆக குறியீடு செய்யப்படுகிறது.முதல் தகவல் அறிக்கை எ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5. அ.சா.1 புகார் வாக்குமூலத்தில் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், அ.சா.1ம் மணிவண்ணன் மற்றும் எலிசபெத்ராணி ஆகியோர் இந்த வழக்கில் 1,2 எதிரிகளை தாக்கிவிட்டு அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக கீழே தவறி விழுந்த காயத்தினை கொண்டு பொய்யாக கொடுத்த புகார்

வாக்குமூலத்தினை சரிவர பரிசீலனை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.36PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**